உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ச.] 1915௵ மார்ச்சு௴ [பகுதி ௩.

## கடோபநிஷத்து.

1-வது அத்தியாயம் 3-வது வல்லி

மந்திரம்-1.

புண்ணியஸ்தானமாகிய மேலாயசரீர குகையிலே பிரவேசித்தனவாய், கன்மபலத்தைத் துய்ப்பனவாயுள்ள இருவஸ்துகள் * சாயையும் ஒளியும்போல வேறாயுள்ளன வென்று, கிரகஸ்தர்களாயும் பஞ்சாக்னி திருணசி கேதாக்னி யனுஷ்டிக்கிற பிரமஞானிகள் கூறுகின்றனர்.

உ. எவன் யாகஞ்செய்கிறர் வர்களுக்கு ஆதாரனாகவிருக்கிறானோ † எது விகாரமற்ற பரப்பிரம்மமோ, சம்சார கடலைத்தாண்ட இச்சிக்கிறவர்கட்குப் பயமற்றகரையோ அது நாசிகேதாக்கினியாலடையப்படும் அப்பரமாத்மாவை யுபாசிக்கிறதற்குச் சமர்த்தர்களாயிருக்கிறோம்.

---

* இருவஸ்துக்களாவன பரமான்மாவும், ஆன்மாவுமாம்.

† யாகத்திற்கு ஆதாரனுர்? என்பது விசாரம். சிவபெருமானே யென்பது தீர்வு, எங்ஙனமெனின்? "காதபதிம் மேதபதிம் ருத்ரம்ஜலாஷபேஷ

௩. ஜீவனை யஜமானனாகவும், சரீரத்தையே இரதமாகவும், புத்தியைச் சாரதியாகவும், மனதைக் கயிறாகவும்.

௪. வித்துவான்கள் இந்திரியங்களைக் குதிரைகளாகச் சொல்லுகிறார்கள், சப்தாதிவிஷயங்களை மார்க்கங்களாகச் சொல்லுகிறார்கள், இவைகளுடன் கூடின ஆத்மாவைப் புசிக்கிறவனென்று சொல்லுகிறார்கள்.

௫. விவேகியான சாரதி எந்த புத்தியாகிற சமாதான மடைந்த மனதுடன் எப்போதும் (கூடியிருக்கிறானோ) அவனுக்கு இந்திரியங்கள் சாரதியின் நல்ல குதிரைபோல வசியமாக வாகின்றன.

௬. எந்தப் புத்தியென்னுஞ் சாரதி அவிவேகியாக விருக்கிறானோ, சமாதானமடையாத மனதுடன் எப்போதும் (கூடியிருக்கிறானோ) அவனுக்கு இந்திரியங்கள் சாரதிக்குக் கெட்டகுதிரைகள் போலச் சுவாதீனப் படாதவைகளாக (இருக்கின்றன.)

௭. எந்த இரதிகன் விவேகரகிதனாகியும், மனோநிக்கிரக மில்லாதவனாயும், எப்போதும் அபரிசுத்தனாயும் இருக்கிறானோ அவன் பரமபதத்தை யடைகிறதில்லை. (ஜனன மரணமாகிய) சமுசாரத்தையடைகிறான்.

---

ஜம்" (பாட்டுக்கு அதிபதியும், இன்பத்தைக் கொடுக்கும் ஔஷதங்களையுடைய யாகத்திற்கு அதிபதியுமானவர் உருத்திரர்) எனவும், "ஆவோராஜாநமத்வஸ்யருத்ரம்" (யஞ்ஞத்துக்கு இராஜாவாக உருத்திரரைநாடுக) எனவும் வரும் ருக்வேத சுருதிகளாலும், "ஸோமேநாராதயேததேவம் ஸோமம்ஸோமவிபூஷணம்" (சோமபூஷணரும் சோமருமாகிய தேவரைச் சோமத்தினாலே வழிபடுக) எனவும் வரும் ஸ்மிருதியானும் அறிக.

அன்றியும், "வாஜச்சமேப்ரஸவச்சமே" "தாதாசமேவிஷ்ணுச்சமே" (எனக்கு அன்னம்வருக எனக்கு அநுமதிவருக, எனக்குத்தாதாவருக எனக்கு விஷ்ணுவருக) எனவரும் யசுர்வேத சுருதிகளால், அன்னமுதலிய வஸ்துகளும், விஷ்ணுமுதலிய தேவர்களும் கொடுக்கப்படும் பொருள்களாகக் கூறப்படுதலான், பாரிசேடப் பிரமாணத்தாற் சிவபிரான் சமஸ்தகன்மபலன்களையும் கொடுப்பவராகச் சிந்திக்கின்றது. அதுபற்றிச் சிவபிரானே சமஸ்தயாகங்களிலும் ஆராத்திக்கற்பாலரும், சமஸ்தபயன்களையும் கொடுப்பவருமாகின்றனர்.

௮. எவனால் புத்தியாகிய சாரதியுடையவனும்,? சமாதான சித்தமுடையவனும், எப்போதும் பரிசுத்தனுமாகிறானோ அவன் எந்தஸ்தானத்திலிருந்து மறுபடியும் பிறக்கயாட்டானோ அந்தஸ்தானத்தை யடைகிறான்.

௯. எவன் புத்தியாகிய சாரதியை யுடையவனாயும், ஏகாக்கிர சித்தமுடையவனாயும் இருக்கிறானோ அவன் சம்சார கரையாகிற விஷ்ணுவினுடைய * சிரேஷ்டமான ஸ்தானத்தை யடைகிறான்.

௧௦ இந்தியங்களுக்குமேல்(விஷயம்)பொருள்கள், பொருள்களுக்குமேல் மனசு, மனசுக்குமேல் புத்தி, புத்திக்குமேல் ஆன்மாவாகிய மகான் (மகத்து)வேறுபா

௧௧. மகத்துக்குமேல் அவியக்தம், அவியக்தத்திற்குமேல் புருஷன், புருஷனுக்குமேல் யாதுமில்லை, அது எல்லை, அதுபரமாகியகதி.

௧௨. இந்தப் புருஷனாகிற (பர)மாத்மா சமஸ்த பூதங்களிலும் மறைபட்டதாய் பிரகாசிக்கிறதில்லை, ஏகாக்கிரமாயும், சூட்சுமமாயுமிருக்கிற புத்தியால், சூட்சுமமான அர்த்தத்தை அறியும் சுடாவமுள்ளவர்களால் அறியப்படுகின்றது.

௧௩. விவேகி கன்மேந்திரியங்களையும், ஞானேந்திரியங்களையும் மனதிலொடுக்கவேண்டும், மனதைப் புத்தியிலொடுக்கவேண்டும், புத்தியை ஆன்மாவிலொடுக்கவேண்டும், ஆன்மாவைச் சாந்தமாகிய பரமாத்மாவிலொடுக்கவேண்டும்.

---

* ஈண்டுக்குறித்த விஷ்ணு எனும்பதம் சிவபெருமானையே குறிக்கும். என்னையெனின்? விளக்குதும். விஷ்ணு=வியாபகம்-வியாபகமாவார் நாராயணரா? அல்லது சிவபெருமானா? எனின், நாராயணரை அதர்வசிரசு "ககாரணர்" எனவொதுக்கி, நாராயணோப நிஷத்து "தியர்தா" எனத்தீர்மானித்து, நிராலம்போபநிஷத்து "ப்ரஹ்மவிஷ்ணவீசானேந்த்ராதீநாம் நாமரூபத்வாராஸ்தூலோஹமித்யத்யாஸவசாஜ்ஜீவ" எனஜீவர்களிலொருவராய்விளக்கி, பைங்களோபநிஷத்து "ஸ்தூலபாலகோ விஷ்ணுப்ரதாந புருஷோபவதி" (சகலஸ்தூலத்தையும இரட்சிக்கும் பிரதானபுருஷன் விஷ்ணு) எனப்பிரகிருதிக்குரிய கர்த்தாவெனத் தாபித்திருத்தலின், நாராயணராகிய விஷ்ணுவின் வியாபகம் ௨௫- தத்துவங்களடங்கிய பிரதிஷ்டாகலாசக்கரம்வரையில் ஆனதால், இவர் வியாபகம் ஏகதேச வியாபகமாம். சிவபெருமானோவெனில் ௩௬-தத்துவங்களடங்கிய சாந்தியாதீதகலா சக்கரத்தைக்கடந்தவராகலின் சிவபெருமானே சர்வவியாபகராம், இங்ஙனமாயின் சிவபெருமானை இவ்வுபநிடதம்

கச. அஞ்ஞான நித்திரையிலிருந்து எழுந்திருங்கள், அவித்தை யினினின்றும் விழித்துக் கொள்ளுங்கள், ஆச்சாரியர்களை யடைந்து தெரிந்து கொள்ளுங்கள், ஞானிகள் ஆத்மதத்துவத்தைச் சிரமப்பட்டுச் சம்பாதிக்கத்தகுந்த மார்க்கமாகச் சொல்லுகிறார்கள், (அம்மார்க்கம்) கத்தியினுடைய தீட்சண்யமான முனைபோன்றதால் அதுகடக்கத் தகுந்ததன்று.

கரு. சப்தமிலதாயும், பரிசமிலதாயும், ரூபமிலதாயும், அவ்வியமாயும், இரசமிலதாயும், நித்தியமாயும், காரணமில்லாததாயும், காரியமற்றதாயும், மகத்துக்கு மேலானதாயும், வேறுபடாததாயு மிருப்பதொன்றை அறிந்து மரணவாயினின்றும் வீடுறுகின்றனன்.

கசு. நசிகேதசால் அடையப்பட்டதும், யமனால் அடையப்பட்டதும் பிராசீனமாயிருக்கிற கதையைச்சொல்லியும் கேட்டும் புத்திமானானவன் ப்ரமலோகத்தில் பூஜ்ஜியனாகிறான்.

கஎ. எவன் சிரேஷ்டமாயும், இரகசியமாயுமிருக்கிற இக்கிரந்தத்தைப்பிராமணசபையிலாவது,சிராத்தகாலத்திலாவது பரிசுத்தனாயிருந்து கேட்கச்செய்கிறானோ அச்சிராத்தம் அநந்தபலத்தின் பொருட்டுச் சமர்த்தமாகிறது, சமர்த்தமாகிறது.

மணவழகு.

---

விஷ்ணு எனும் பதத்தாலழைத்த தென்னையெனின், சிவபெருமானின் நாமாட்டகத்துள் விஷ்ணு எனும்பதமொன்றாகலினென்க. இவ்வுண்மை "பரிவோமகேஸ்வரச்சைவருத்ரோ விஷ்ணுபிதாமகா" எனும் வாயுசங்கிதை பூர்வபாகத்திற்காண்க. அன்றியும் மந்திரத்திற்குறித்த சம்சாரகனையைக் கடக்கிறதற்குச் சிவபெருமானே இலக்காமன்றி வேறுதேவரன்று "தஸ்மாத்ஸர்வாந்பரித்யஜ்யோக்விஷ்ண்வாதிகாந்ஸ—ாசிவ ஏவஸதாத்யேயஸ்ஸர்வஸம்ஸாரமோசகா" (சமுசாரதுக்கசாகரமுத்திப் பிராப் தியின் பொருட்டு விஷ்ணுமுதலிய சர்வதேவர்களையும் விட்டு எஞ்ஞான்றும் தியேயனாகவுள்ள சிவனையே தியானிக்கவேண்டும்) எனும் அதர்வணவேத சரபோபநிஷத்தாற்காண்க.

௵

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# "தாயுமானவர் கொள்கை"

தொகுதி-4 பக்கம்-44 தொடர்ச்சி.

சித்தியார் செய்யுளுக்கும் எடுத்துக்கொண்ட செய்யுளுக்குமுள்ள சம்பந்தம் வருமாறு:—

| எடுத்துக்கொண்ட செய்யுள். | சித்தியார் செய்யுள். |
|---|---|
| ஐந்துவகையாகின்ற பூதமுதனாதமுமடங்க வெளியாக வெளிசெய், தறியாமை யறிவாதி பிரிவாக அறிவார்கள். | அருளினா லறியாமை அறிவகற்றி |
| அறிவாகநின்ற நிலையில் ... | அறிவினுள்ளே யறிவுதனையறியாதே யறிந்து |
| சிந்தையற ... ... | குறியாதே குறித்தந்தக் கரணங்களோடுங் கூடாதே |
| நில்லென்று ... ... | வாடாதே |
| சும்மாவிருந்தி ... ... | குழைந்திருப்பையாயில் |
| மேற்சின்மயானந்த வெள்ளந்தேக்கித்திளைத்து | பிறியாதசிவன்றானே பிரிந்துதோன்றிப் பிரபஞ்சபேத மெல்லாந் தானாய்த்தோன்றி யிவையல்லாமல்லவாகி |
| நானதுவாயிருக்க... ... | நெறியாலே நின்றென்றுந் தோன்றிடுவனிராதாரனாயே. |
| நீ செய்சித்ர மிக நன்றுகாண் ... ... ... மூலன் மரபில்வரு மௌனகுருவே | |

பாதி விருத்தமென்று புகழப்பட்ட சித்தியாரில் கூறப்படும் இச் செய்யுளைத் தாயுமானவர்தாம் கூறிய செய்யுளில் பாதியில் அடக்கினமை அறிக. அந்தக் கரணங்களோடுங் கூடாதே என்னுஞ் சித்தியார்ப் பொருளை தமது செய்யுளில் சிந்தையற என்றும், அந்தக் கரணங்களோடு கூடாத விடத்துக் கேவலாவத்தை வந்து கூடுமாத

லால் அந்த அவத்தையிற் சேராமல் நிற்கவேண்டு மென்பதை வாடா தே எனச் சித்தியாரிற் கூறியதை நில்லென்றும், அங்ஙனம் நிற்குங் காலத்து நிற்கின்றே மென்னுந் தற்போத மிழந்து நிற்கவேண்டு மென்பதைக் குழைக்திருப்பையாயில் எனச் சித்தியாரிற் கூறியதை சும்மாவிருத்தி யென்றுந் தாயுமானவர் கூறினர். மற்றவை வெளிப் படை.

ஆகவே தாயுமான சுவாமிகளின் கொள்கை சைவசமயமே என்பதாம். இச்சைவ சமயத்திற்றான் கடவுளுக்கு உருவத்திருமேனி, அருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி இம்மூன்றுங் கடந்த சச்சிதானந்த சொரூபத் திருமேனி உண்டென்று கூறும். ஆதலினாற்றான் ஒவ்வோரிடங்களில் ஒவ்வொன்றை வியந்து கூறினர். அவ்வாறு கூறியிருத்தல் சந்தர்ப்பங் கருதியேயாம். ஆதலால் முரணாது. இவர் சமயம் சைவமே என்பதனை "ராஜாங்கத் தமர்ந்தது வைதிக சைவம்" எனவும் "சைவசமயமே சமயம்" எனவும் அருளிய அவர் திருவாக்குகளானும் நன்கு தெளிக. இன்னும் சைவமென்பது பாடாணவாத சைவம், பேதவாத சைவம் முதலாகப் பலதிறப்படு மாதலால் அவற்றுள்ளும் சித்தாந்த சைவமே தமது கொள்கை என்பதைச் "சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே,, என்பதனு லருளிச் செய்வாராயினர்.

அவர் பாட்டில் "வேதாந்த வீட்டின் விளக்கே பராபரமே" எனவும் "வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும் நாதாந்த மோனநலமே" எனவும் "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை" எனவும் இவ்வாறாக வேதாந்தத்தைப் புகழ்ந்தும் சமரசமாகவும் கூறியதன் கருத்தென்னை? எனின் கூறுதும்.

வேதாந்த மென்பது வேதத்தின் அந்தமாகிய உபநிடதங்களாம். அவற்றில் தாயுமான சுவாமிகளுக்கு மிகுந்த ஆராய்ச்சியுண்டு. உபநிடதங்களில் கூறப்படும் நெறி முத்தியை அடையச் செய்யுமென்பதும் அவருக்கு உடன்பாடேயாம். ஆயினும் ஒரு கடலைக் கடப்பதற்கு இரண்டு படகுகள் நல்லனவாகக் காணப்படின் இரண்டின்

மீதும் இருகால்களைவைத்துச் செல்லின் அக்கரை சேராமல் கடலுள் மூழ்கித் துன்புற நேருமாதலின் ஒன்றைப் பற்றியே செல்லுதல் முறைமையாகும். அதுபோல வேதாந்த சித்தாந்தம் இரண்டும் முத்திக்கு நேர் நெறியே * யாயினும் யாதானுமொன்றில்தான் செல்லவேண்டும். செல்லுங்கால் மற்றொன்றைச் சமமாகக் கொள்வதே யன்றி சான்றோர் இகழமாட்டார்கள். அவ்வாறே தாயுமானசுவாமிகளும் சித்தாந்த நெறியில் நின்றுகொண்டு வேதாந்தத்தைச் சமரசமாகக் கூறினாரென அறிக.

## முடிவுரை.

தாயுமானவர் கொள்கை என்பது அவர் கொண்டசமயம் எது? என்பதைக் குறிக்குமென்பதூஉம், அவர் பாடல்களே இதனை ஆராய்தற்குக் கருவியாமென்பதூஉம், கன்மமே கடவுள், அருவமே கடவுள், உருவமே கடவுள், நாங்களே கடவுள் என்னுஞ் சமயங்கள் தாயுமானவருக் குடன்பாடில்லை என்பதூஉம் சித்தாந்த சைவமே அவர் சமயமா மென்பதூஉம் பிறவுமாம்.

இங்ஙனம்:

பொ. முத்தைய பிள்ளை,

திருவாவடுதுறை ஆதீன

சைவப்பிரசாரகர்

தூத்துக்குடி.

---

* "ஆரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்புநூல்" எனவும், "வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்" எனவும், 'வேதச்சிரப் பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்திறத்தடைவர் எனவும், "வேதாந்தப் பொருளைத் தெளித்துக் கூறுவது சித்தாந்தம்" எனவும் வருவனவற்றாலும், வேதாந்தமும் வேதாந்த தாமாகிய சித்தாந்தமும்பரிபாகிகள் பேதத்தாலிரண்டாகி,வேதாந்தம் சிவோகம்பாவனை யோடிருக்கும் சீவர் முத்தர் நிலையினையும், சித்தாந்தம் முதல்வனுடனிரண்டறக்கலந்து அனுபவிக்கும் சுத்தாத்து விதானுபவாதீதானந்த நிலையினையும் விளக்குமாகலினாலும்,வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் முறையே பொதுசிறப் பெனக்கொள்ள வேண்டியிருத்தலினாலும், முத்திக்கு இரண்டும் நேர் நெறியெனக் கொள்வது எங்ஙனம்? பொது நூலாலடையும் பயனும் சிறப்புநூலாலடையும்பயனும் சமமாதல்எங்ஙனம்? சிறப்பு நூலை நோக்கப் பொது நூல் பூர்வபட்சமாகாதோ?

ப-ர்.

சிவமயம்.

# "ஒழுக்கம்"

"ஒழுக்கம் உயர்குலத்தினன்று"

ஒழுக்கமானது யாவர்க்குஞ் சிறப்பைத் தருகின்றதாதலால் அதை உயிரைப் பார்க்கிலுஞ் சிறந்ததாக்கருதி அதற்கிடையூறில்லாமல் நடத்தவேண்டுமென்பதை யுணர்ந்தவர்களே ஒழுக்கமுடையவர்கள். இக்கருத்திற்கிணங்க நமதுதெய்வப் புலமைவாய்ந்ததிருவள்ளுவர் திருவாய்மலர்ந்தருளிய செய்யுளால் தெளிக.

"ஒழுக்கம் விழுப்பந்தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

இம்மை மறுமைக்குத் துணையாகவிருக்கும் தர்மமெது வென்று பலநூல்களையு மாராயுமிடத்து ஒழுக்கமே முக்யமெனச் சொல்லியிருக்கின்றமையால், அவ்வொழுக்கத்தை எவ்விதத்திலும் தப்பிப்போகவொட்டாதபடி காப்பாற்றவேண்டும்.

"பரிந்தோம் பிக்காக்க ஒழுக்கந்
தெரிந்தோம்பித் தேரினும், அஃதே துணை"

சாதியா சாரத்திற்குத்தக்க வொழுக்கத்தை யனுசரித்து நடத்தலால் நல்லகுலத்த னுவானென்றும், அவ்வொழுக்கத்திற்கு விரோதமாய் நடப்பவன் இழிகுலனுவானென்றும் பலநூலிலும் விதியாகச் சொல்லப்பட் டிருக்கின்றது.

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந்
தீயொழுக்கம் என்றும் இடும்பைதரும்"

பிராமணன் வேதத்தை மறந்துவிடுவானுனும் மறுபடியுங் கற்றுக்கொள்ளலாம். ஒழுக்கத்தை விட்டுவிட்டால் அவனது உயர்ந்த ஜாதித்தன்மை கெடுமேயல்லது உயர்வாக மாட்டாது. பொறாமையுடையவனிடத்துச் செல்வம் நிலையாதது போலவே நல்லொழுக்க மில்லாதவனிடத்து மேன்மை நிலைத்திருக்க மாட்டாது.

"அழுக்கா றுடையான்கண் ஆக்கம் போன்றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு"

ஒழுக்கத்தை விட்டால் இழிகுலஸ்தனாக வேண்டுமென் றறிந்த புத்திமான்கள் அவ்வொழுக்கத்தி லிருந்து சிறிதும் வழுவார்கள். நல்லொழுக்கத்தால் விஷ்டத்வமும் அஃதில்லாமையால் ப்ரஷ்டத்வமும் உண்டாகு மென்பதற்கு ப்ராமாணமென்னவெனில் நன்மைக்கெல்லாம் மூலம் ஒழுக்கமென்றும் தீமைக்கெல்லாம் மூலம் ஒழுக்கமில்லாமையென்றும் சொல்லப்பட்டிருப்பதுவேயாம். ஒழுக்கமுடையவர்கள் தங்கள் ஜாதிக்கும் குலத்துக்குந் தகாதபொய் முதலியவைகளை மறந்து நீக்கிவிடுவார்கள். ஒருவேளை நீக்காமலிருப்பார்களாகில் நல்லொழுக்கமில்லாத நீசரெனப்படுவதற்கு ஸந்தேஹிக்க வேண்டுவதில்லை.

கல்விக்குப்பயன் அறிவு; அறிவுக்குப்பயன் ஒழுக்கம் இவ்வொழுக்கத்தை யுணர்ந்து நடக்கக் கல்லாதவர்கள் பலநூல்களைக் கற்றும் அறிவிலா ரென்றே சொல்லப்படுவார்கள்.

இக்கருத்து நோக்கியே நாயனார் வாக்கு எழுந்ததுபோலும்.

"உலகத்தோ டொட்ட ஒழுகல்
பலகற்றுங், கல்லார் அறிவிலாதார்"

ஆதலால் யாவரும் ஒழுக்கத்தை மேற்கோண்டு நடக்கவேண்டும்.

இப்படிக்கு
தங்கள் மெய்யன்பன்
நாகை. S. மெய்கண்ட முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முத்தமிழ்ச் செல்வராகிய மாணிக்கவாசகர்

# காலவாராய்ச்சி.

---

தமிழருள் மிகவும் பழையகாலத்துத் தோன்றினவரும் பழைய தமிழர்களது முத்தமிழ்த்தழுவிய அரிய பாடல்களைப் புனைந்தவருபாகிய மாணிக்கவாசகரைக் குறித்து உரை எழுவது அக்காலத்து வழங்கிய தமிழ்நூல்கள் பலவற்றினை இலக்கணவமைதியோடு கற்றுத் தெளிந்தவர்க்கே அருமையென்றால், என்போன்ற புல்லறிவினர் அத்தகைய அருந்திறற் சைவத்தமிழ் மேதாவியரின் செய்தியைக் கூறுதல் அறியாமையேயாம்.

அஃதன்றியும், தமிழர்களினது செய்திகளைக் கூறுவதற்கு முக்கிய கருவிகளாகப்போந்த அரியபெரிய செந்தமிழ்நூல்கள் இறந்துசில சூத்திரங்கள் உரைகளிலும் தனித்தும் வழங்குகின்றன. தமிழர்களது ஒழுக்க வழக்கங்களைக்கூறும் அரிய நூல்களுள் இக்காலத்தும் அழிவின்றிக் கிடைக்கு முழுநூல்களாய் உள்ளது தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் என்கிற இரண்டுநூல்களேயாம். மற்றைய அகத்தியம், மாபுராணம், பூதபுராணம், அவிநயம், இளந்திரையம் முதலியன இறந்து இன்னும்சில சூத்திரங்கள்மாத்திரம் நடைபெற்று வழங்கிவருகின்றன. *நிற்க, தமிழுக்கு ஆரியவழக்குகளாகிய யுகக்கணக்குகள்கிடையா. அவைகளைத் தழுவிச் சிலதமிழ்நூல்களில் எழுதப்பட்டாலும் அவைபொருத்தமுறாது மயங்கும் என்க. அப்படி எழுதினவும் பிற்காலத்தினவேயாம். இறையனார் அகப்பொருள் உரையின் பாயிரத்து மூன்று சங்ககாலங்களையும் காட்டுமிடத்து யாண்டினைமாத்திரம் குறிக்கின்றனர். இற்றைக்கு ௧௧00 யாண்டுகட்கு முன்னிருந்த அடியார்க்கு நல்லார் முதலூழியிற் தலைச்சங்கத்தையும், இரண்டாவது ஊழியில் இடைச்சங்கத்தையும் குறிக்கின்றனர். இடைச்சங்கத்துக் கடல்கொண்டு போந்திருந்த முடத்திருமா

றனே கடைச்சங்கம் தோற்றிவித்தபடியால் அதனைமூன்றாவது ஊழியில் என்று கூறின், யுகக்கூறுபாட்டளவைக்கு மாறுபடுமென்று மயங்கினர்போலும். ஆயினும் தற்காலத்து உள்ள வடநாட்டுமேதாவிகளும் யுகங்களைப்பற்றி வேதாங்க சோதிடநூல், சூரிய சித்தாந்தம், வராகமிகிரர் பஞ்சசித்தாந்தம் முதலிய நூல்களில் யுகங்கள் கூறப்படாமையைத்தழுவி அவைகளைப் பிற்காலத்தவர்கள் கட்டியதென்று ஒப்புக்கொள்கின்றனர். கடைச்சங்கம் தோன்றிய காலத்தில் தோற்றிய வேதவியாதர் தாம் எழுதிய புராணங்களில் யுகங்களை வகுத்துக் கூறியிருக்கின்றனர். அவர் கூறியவாறு வேதாங்கச்சோதிடம், சூரிய சித்தாந்தம், வராமிகிரர் பஞ்சசித்தாந்தம் முதலியன யுகவளவைக் குறைத்து மாறாகக்கூறிக்கின்றனர். 1906–வது ஆங்கிலவாண்டில் பிரசுரமான அஜ்மீரில் உள்ள "ஹார்பிலாஸ் சாரதா என்னும் மேதாவியால் வெளியிடப்பட்ட இந்து சுபீரியாரடி (Hidu Superiority) என்னும் நூலில் கூட இப்போழ்து கடந்திருக்கின்ற கலியுகம் 5016 யாண்டுகளை ஒப்புக்கொள்ளப் படுகின்றது. அக்கலியுகம் 5016 யாண்டுகட்குமுன்னரே கடைச்சங்கம்தோன்றிக்கலியுகம் 2000யாண்டுகள் வரை நடைபெற்று வந்தது. முதன்முதல் சங்கச்செய்தியைக் கூறியிருக்கின்ற அகப்பொருள் உரைப்பாயிரத்து 850 யாண்டுகளேகுறித்திருக்கின்றன என்பார்க்கு அச்சங்கம் புத்தர் காலத்தும் கண்ணகியார் காலத்தும், பல்வற்சகாலத்தும் இல்லாமையும் வேறுநூல்களுள் 1950, 2000 என்று கூறப்படுவதாலும் என்க. நம்சிவபெருமானே தலைச்சங்கத்துத் தலைமைப்புலவனாக விருந்து தமிழாய்ந்தும் இடைச்சங்கத்துப் பாண்டியனாகிச் சங்கப்புலவரைப் போற்றியும் கடைச்சங்கத்து வேற்றுப்புலவனைப் போன்றுவந்து சங்கத்தார் மயக்கு ஒழிந்தமையினாலும் அச்சங்கப்பெருமையை எம்மால் கூறத்தரமன்று. இதனைவியந்து சமயகுரவர்களும் சிற்சில குறிப்புகள் காட்டியிருக்கின்றனர். இப்போழ்து எழுதப்பட்டு வருகின்ற தொண்டைமண்டல வரலாற்றுள் பல யாண்டுகளாய்ப் பழைய நூல்களையும் கல்வெட்டுகளையுங்கொண்டு நுணித்து ஆராய்ச்சிசெய்த முறையில் ௨௮00 ஆண்டுகட்கு முன்னிருந்தவர் என்று ஏற்படுகின்றவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரும் ஷை சங்கப்புலவர்களைத் தமது திருத்தொண்டத்தொகையில் பொய் யடிமையில்லாத புலவர்க்கு மடியேன் என்று சொல்லியிருக்கின்ற படியினாலும், அரும்பெறல் தமிழ்க்கடவுளாகிய கந்தழி என்று பண்டைய தமிழ் ஒத்துகளுள் கூறப்பட்டிருக்கின்ற

சிவபெருமானையும் அவ்வக்காலத்து நிகழும் உண்மைச் செய்திகளை யுமே பாடிப் பெருமையடைந்தவர்கள் என்ப. யாம் பலநாடுகளில் உள்ள ஆலயங்களின் கல்வெட்டுகளைப் பார்த்தபோழ்து விளங்கிய சில செய்திகளுள் முக்கிய மானவை. திருமுறை கண்ட சோழன் காலம் இற்றைக்கு ஆயிரத்து ஐந்நூறுயாண்டுகள் ஆயின. அவன் காலத்தினுக்குப்பிற்பட்ட கோயில் சாசனங்கள் பலவற்றுள்ளும் அவ் வக்கால வரசர்கள் பேர் இட்டெழுதியிருக்கின்ற செய்திகளுள் திருப் பதியம் விண்ணப்பஞ் செய்வார் நால்வருக்கு நெல்குறுணி எனவும். திருப்பதியம்பாடும் திருமேனிகள் இருவர் எனவும், திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யும் சைவர்நால்வர் எனவும், பதியம்பாடும் சைவ மாஹேஸ்வரர் நால்வர் எனவும் கூறப்பட்டிருக்கின்றன. இஃதன்றி யும் தொண்டைமண்டலத்துக் காலியூர்க்கோட்டத்துக்காழியூர்நாட்டு திருவோத்தூர் உடையநாயனாருக்கு நாலாவது திருநாளில் திருப்பதி யம் பாடுவார் ஒரு சைவருக்குக் குதிரைச்சேவகன் தாங்கல் என்கிற ஊரைக் கொடுத்திருக்கின்றதாகவும் காட்டப்பட் டிருக்கின்றது. இம்மாதிரி கல்வெட்டுகள் பலஉள்ளன. அம்மாதிரி 1500 யாண்டு கட்கு உள்ளாக இருக்கின்ற சைவக்கோயில்களுள் திருப்பதியம் விண் ணப்பஞ் செய்வதற்காகப் பல சைவ வோதுவார்களை நியமித்திருந்த மையை நோக்குமிடத்து ஆயிரத்துஐந்நூறு யாண்டுமுன்னர் இராஜ ராஜசோழன் காலத்துத் திருமுறையை அதற்குமுன் சிதறுண்டு ஒவ் வோர்தலங்களுள் அவ்வவ்வூர் பதிகமே வழங்கிவந்திருந்தது நீங்கி, நம்பியாண்டார் நம்பியின் திருவருளால் இப்போழ்து உள்ள பெரும் பாகம் கிடைக்கப்பட்டன வென்று தோன்றுகின்றது. தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி நாயனாரால் மாணிக்கவாசகரைப் பாடாது விட்டமையால் அச்சுந்தரமூர்த்திகளது காலத்திற்குப் பிற்பட்டவர் என்பது பலபேருடைய கோட்பாடு எனப்பலர் பத்திரிகைகளில் எழுதுகின்ற வியாசங்களால் நமக்கு விளங்குகின்றன.

இன்னும் 1500 ஆண்டுகளுக்கு முன்னிருந்த திருவிசைப்பா பாடிய ஒன்பதின் மருள் ஒருவராகிய பூந்துருத்தி நம்பிகாடநம்பி என்பாரால் மேற்படி திருவிசைப்பாவில் தில்லையாகிய கோயிலுக்குப் பாடிய செவ்வழியாழின் திறனாகிய சாளரப்பாணி என்கின்ற இசை அமைந்த இசைப்பா பத்தினுள் 2-3-4-என்களுள்ள யாட்டின் கணம்புல்லர், கண்ணப்பரையும், ஆரூர்நாவுக் கரசையும், சம்பந்தர்

காழியர் கோனையும், சேரமான் பெருமாளையும் குறித்துப் பாடியவர் ஷை மாணிக்கவாசகரைப் பாடாது விட்டமையால் அவர்கள் காலத்துக்குப் பின்னவர் என்று அவரைக் கூறுதல் அமையாதென்க.

இனி மாணிக்க வாசகரைப் பன்னிரு திருமுறையினுள்ளும் பாடியுள்ளவர் இருவர் என்க. அவர்களுள் திருநாவுக்கரசு சுந்தரமூர்த்தியாருக்கு முந்தி எழுநூறு யாண்டுகட்கு முன்னுள்ளவரென்க. பட்டினதடிகள் சுமார் இற்றைக்கு 2000 யாண்டுகட்கு முந்தியிருந்தவர் அவர் காலம் திருநீற்றுவியாத்த சோழன் காலம் என்ப.

இன்னும்வரும்.

இப்படிக்கு

திரு-சுப்பிரமணிய தேசிகன்.

சிலாசாசன பரிசோதர்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவோபாசனமகிமை.

தொகுதி-4 பக்கம்-9 தொடர்ச்சி.

செய்யவார் சடைத் தெய்வசிகாமணி
பாதம் போற்றும் வாதவூரன்ப''

என்பதனுலும்,

"யாதொரு தெய்வங் கொண்டீரத் தெய்வமாகி யாங்கே-மாதொருபாகனர் தாம்வருவர்"

என்பதனுலும்,

எவரெவர் எவ்வெத் தேவரைக் குறித்து வழிபடினும் அவ்வத் தேவரிடமாக நின்று, அவற்றை யேற்று அவரவர் வேண்டிய பயன்களை அளிக்கவல்ல முழுமுதற் கடவுள் சிவபெருமானொருவரேயென்பார் தெய்வசிகாமணி என்றும், மும்மலவழுக்கை ஞானநீராற் கழுவி மெய்ஞ்ஞானிகளோடு கலந்துகூட்டி அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் முதல் எனவேகண்டு வழிப்படுதல் அரன்கழலணைந்த சீவன் முத்தர்க் கியல்பாகலின் போகசாதனமாயுள்ள உட்கரணங்களும், புறக்கரணங்களுமாகிய பசுகரணங்க ளெல்லாம் அளத்திற்பட்டபுற்போலச் சிவப்பிரகாசத்தினுற் சிவகரணமாய் நிகழச் சுகானுபவமுதிக்கப் பெறுமென்பதும் பெற்றும்.

பெறவே, பசுபதியாகிய சிவபிரான் ஆன்மாக்களின் பரிபக்குவத்திற்கியைய அநுக்கிரகிக்கும் வகை பலவற்றுள் திருவேடமே மிகச் சிறப்புற்றன என்பது தோணிக்க,

நமது குமரகுருபர சுவாமிகள்,

நேரிசையாசிரியப்பா.

"செய்தவ வேடமெய்யிற் றூங்கிக்
கைதவ மொழுக்க முள்ளைவைத்துப் பொதிந்தும்
வர்திசைக்கின் றய்வாய் பிளந்தன்ன
கடவுண் மன்றிற் திருநடங் கும்பிட்

டுய்வது கிடைத்தனன் யானேயுய்தற்
கோருபெருந் தவமுமுனூற் றிலனுனூற்று
தெளிதினிற் பெற்றதென் னெனக்கிளப்பிற்
கூடாவொழுக்கம் பூண்டும் வேடங்
கொண்டதற்கேற்ப நின்றெண்ட ரொடுபயிறலிற்
பூண்டவவ் வேடங்காண் டொறுங்காண்டொறும்
நின்னிலை யென்னிடத் துன்னியுன்னிப்
பன்னு ணுக்கின ராகலினன்னவர்
பாவனைமுற்றி யப்பாவகப் பயனின்யான்
மேவரப் பெற்றனன் போலுமாகலின்
எவ்விடத் தவநிலை யெண்ணினர் நீயுமக்
றவ்விடத்துணை யெனற்கையம் வேறின்றே"

என அருளியவாற்றுனும்,

இன்னும் நமது சேக்கிழார் சுவாமிகள் மெய்ப்பொருணயனுர் புராணத்தில் "மெய்த்தவ வேடமே மெய்ப்பொருளெனத் தொழுது வென்றார்"

என ஒரு திருவிருத்தத்தி னிறுதியில் அருளியவாற்றனுந் தெற்றெனவிளங்கும்,

இன்னும் நாம் சிவனை உபாசிக்க வேண்டியவகையில் புறத்தொழில், அகத்தொழில், அறிவுத் தொழில் என முத்திறப்படும். அவற்றுள் அறிவுத்தொழில் ஒன்றே ஆன்மாவின் நேர்வணக்கம். அகத்தொழிலும் புறத்தொழிலும் ஆன்மா வல்லாத அகக்கரண் புறக்கரணங்களாற் செய்யப்படுதலின், ஆன்மாவின் நேர்வணக்க மாகாவாம்.

புறத்தொழில் வணக்கம். அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்தலும், கால்களால் முதல்வன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தைப் பிரதட்சணம் புரிதலும், கண்களால் கடவுள் உயிர்பொருட்டுக் கருணையினுற்கொண்ட சிவலிங்க முதலான திருவுருவைத் தரிசித்தலும், கைகளால் அவ்வுருவை அர்ச்சித்தலும், வாயினுல் அக்கடவுளின் புகழ் முதலியவற்றை நமது சமயாசாரிய அவர்கள் அருளிய தேவார திருவாசக முதலிய அருட்பாக்களினுல் ஓதித்துதித்தலும், செவிகளால் முழுமுதற்கடவுளின் திவ்விய சரித்திர முதலியவற்றைக்

கேட்டுணர்தலும் அவனது திருமேனிக்கு வேண்டப்படும் பூமாலைகளைத் தொடுத்துக் கொடுத்தலும் திருநந்தனவனப்பணி செய்தலும் ஆலயத்தை அலகிடல் மெழுகிடல், திருவிளக்கேற்றுதல், தூபமிடுதல் முதலானவைகளும் இன்னும் இவைபோல் வன பிறவுமாம்.

காயத்தொழிற் றொண்டுகள் இன்னும் பலவுளவாயினும் அவற்றை இங்குவிரிக்கிற் பெருகுமென் றெண்ணி விடுத்தாம்.

ஆகவே இனி அகத்தொழில் வணக்கம், காயத்தின் உள்ளிடமான மூலாதாரம் சுவாதிஷ்டானம் மணிபூரகம் விசுத்தி அநாகதம் ஆஞ்ஞை என்னும் ஆதாரங்களின் முதல்வ னுருவைப் பாவித்து மனத்தினாற் சிந்தித்தலாம். காயத்தொழிலும் காயத்திலுள்ள இந்திரியங்களின் தொழிலும் இங்கில்லாமையால், காயமும் இந்திரியமும் ஒடுக்கியடங்கி நிற்க அகக்கருவியாகிய மனமே தியான வியாபாரஞ் செய்துநிற்றலின், இவ்வணக்கம் அகத்தொழில் வணக்க மென்று சொல்லப்படும். புறக்கருவியினும் அகக்கருவி ஆன்மாவோடு அந்தரங்கவுரிமை யுடையதாதலின், புறக்கருவியாற் செய்யும் வணக்கத்தினும் அகக்கருவியாற் செய்யும் வணக்கம் விசேட முடைத்தாம். அன்றியும் புறக்கருவிகளை முதல்வன் வணக்கத்திற் செலுத்துங்கால் அவை அவ்வணக்கத்தில் நிலைத்து ஒடுங்கி யமைந்து நில்லாமல் வேறுபட்ட உலக விடயங்களைத் தாவிச்செல்லும். அதனால் அவ்வணக்கம் பூர்த்தியாதலின்றிச் சிதைவுபடும். அகத்தொழில் வணக்கத்தில் இயமநியமங்களுடையனாய் ஆசனமிட்டு இருத்தலினாலும் பிராணாயாமஞ்செய்து வாயுவை நிறுத்துதலினாலும், பிரத்தியாகாரத்தால் இந்திரியங்களை ஒடுக்குதலினாலும், காயமும் இந்திரியமும்விடயவியாபாரமற்று அடங்கி யொடுங்கித் தொழிலின்றி நின்றுவிடும். தாரணையினாலே அகக்கருவியாகிய மனம்வேறு வியாபாரமின்றி ஒருநிலைப்படும். தியானத்தினாலே அம்மனம் ஆதாரங்களிற் பாவிக்கப்படும் முதல்வன் றிருவடியையே பற்றிநிற்கும், சுபம்.

இன்னும்வரும்.

இங்ஙனம்

S. நடேசதேசிகர்
கவர்ன்மெண்ட் ஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர்
கோட்டுச்சேரி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# விசுவாசம்.

இந்த நிலவுலகத்தின்கணுள்ள சீவதோற்றங்கள் அனைத்தினும் சிறந்தது மானுடதோற்றம். மானுடதோற்றம் எடுத்தார்க்கெல்லாம் மிக முக்கியமாயுள்ளது சமயம். இந்தச் சமயத்துக்கு இன்றியமையாச் சிறப்பினதாயுள்ளது விசுவாசம். இந்தவிசுவாசம் சமயஞானங்களின் மாத்திரமல்ல, லௌகிகவிஷயங்களிற்றானும் எமக்கு அத்தியாவசியகமாக வேண்டப்படுவதொன்று. ஆனால் இந்த விசுவாசம் சமயத்துறைகளில் நிகழுமிடத்து, இதனை இக்காலத்திலுள்ள அறிவுப் பிரியர் சிலர் நகையாடத் தொடக்கிக் கொண்டார்கள். இதுவும் கலிகால வலி என்றே சொல்லத்தக்கது. மக்கட்பிறவி எடுத்தார் அனைவர்க்கும் விசுவாசம் என்பது இன்றியமையாச் சிறப்பிற்றாயதோர் அணிகலம். ஆதலின் அதனைக் குறித்து ஆராய்ச்சிசெய்வது பெரும் பிரயோசனமாமெனக் கருதினேம்.

## விசுவாசம் இன்னதென்பது.

விசுவாசமாவது உண்மை எனக் கொண்டதொரு கொள்கையில் உறைப்புற்று நிகழும் உள்ளத் துணர்ச்சி. இந்த உணர்ச்சி ஆன்மசிற்சத்தியின் ஓர் இயற்கைக் குணம். இது நமது சுயேச்சையால் அமையுந் தகுதியுடைத்தல்ல. நமக்கு விசுவாம் பிறத்தற்கமைந்த ஏதுக்கள் இல்லாவிடத்து, நாம் எங்ஙனம் முயன்றாலும், விசுவாசம் பிறக்குமாறில்லை. அது பிறத்தற்கமைந்த ஏதுக்கள் நிகழுமிடத்து, எமது முயற்சியின்றித்தானே பிறக்கும். நமது சைதன்னிய ஆற்றலின்கண் யாதொரு உண்மை புலப்படுமிடத்து, அப்புலப்பாடு காரணமாக, அவ்வுண்மையைக் குறித்து நமது மனத்திலே ஓர் உணர்ச்சி தோன்றும். இவ்வுணர்ச்சியே விசுவாசம் எனப்படுவது. எமது சைதன்னிய சொரூபமே இவ்வுணர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

அறிவதும் உணர்வதும் ஆகிய இரண்டும் எமது சிற்சத்தியின் தொழில்களே யாயினும், இவை இரண்டற்கும் பெரிதும் பேதமுண்டு. உணர்தற்றொழில் (அறிவுபற்றி நிகழுமிடத்து), அறிதற் றொழிலுக் குப் பின்னர் நிகழ்வது. அறிதற்றொழில் எமது சைதன்னிய ஆற்ற லின் புறத்தொழிலும், உணர்தற்றொழில் அதன் அகத்தொழிலுமா மென்று கொள்ளத்தக்கன. அறிதற்படி ஒன்றும், உணர்தற்படி பிறி தொன்றுமா மென்று கொள்ளினும் இழுக்காகாது.

## விசுவாசந் தோன்று முறை.

விசுவாசந் தோன்றுமுறையினை நாம் ஆராயுமிடத்து, அது இய ற்கைமுறையும் விளக்க முறையுமென இருகூற்றதாம் என்று கொள் ளத் தக்கது. இயற்கைமுறையாவது எமது அறிவின் சகாயம் பெரிது மின்றி, இயற்கைச் சார்புகள் காரணமாக எவ்விடத்துண்டாகும் உண ர்ச்சி. இந்த உணர்ச்சியை நாம் ஆராயுமிடத்து, இதனுக்கேதுவாகிய கருவி மானுடதோற்றத்தின் மாத்திரமல்ல, சீவதோற்றங்கள் அனைத் தினும், அவ்வத் தோற்றங்களின் இயற்கை மரபளவாக அமைந்திருக் கக் காணலாம். தாவரங்களின்கணுள்ள பரிசஉணர்ச்சியும், மிருகங்க ளின் கணுள்ள இயக்கஉணர்ச்சியும் போல்வன இக்கருவி காரணமா கவே பிறக்கும். மனிதனிடத்திலும், அறிவாற்றலைச் சாதிக்கும் பக் குவம் வந்தெய்துமளவும், இந்தக் கருவிகாரணமாகப்பிறந்த இயற்கை உணர்ச்சி மாத்திரமே உள்ளது. அறிவாற்றல் சாதிக்கும் பக்குவம் எய்தியபின், அச்சாதனை காரணமாக இவன்பாற் பிறக்கும் உணர்ச் சியே விளக்க உணர்ச்சி என்று கொள்ளப்படுவது. இந்த விளக்க உண ர்ச்சிக்கு முக்கிய காரணமாய் உள்ளது இவனது அறிவுவிளக்கமாம். இந்த விளக்கமும் பிரத்தியட்சக் காட்சி சாட்சியக் காட்சி என்று இருதிறப்படும். இவற்றுள், பிரத்தியட்சக் காட்சியாவது தானாக ஒன்றனை நேரே காண்பது. சாட்சியக் காட்சியாவது தான் காணாத தொன்றைச் சாட்சியவாயிலாகக் கேட்டறிவது. இவ்விருதிறக்காட்சி களும் மாந்தர்க்கு அறிவு பிறக்கும் வாயில்களாம். இந்த விஷயத்தை நாம் நுணுகி ஆராய்வதுண்டெனின், உலகத்திலே மனிதர் எல்லாம் அறிவு பெறுவது அனேகானேகமாகச் சாட்சியக்காட்சி வாயிலாற்று னே என்பது நன்கு போதரும். நாம் எமதுபாலப் பருவத்திலே எமது பெற்றூர் முதலிய சாட்சியங்கள் வாயிலாகவும், அதன் பின்னர் ஆசி ரியர் முதலிய சாட்சியங்கள் வாயிலாகவும், அதன்பின்னர் அயலார்,

உறவினர், நட்பாளர், அறிஞர் என்றின்னோரது சாட்சியங்கள் வாயிலாகவும் நாம் அறிவின்விருத்தியுறப் பெறுகின்றோம். மனுஷன் கிஞ்சிஞ்ஞன் ஆதலின் அவன் எல்லாக் காட்சிகளையும் பிரத்தியட்சமாகக் கண்டறிதல் கூடாது. சாட்சியக்காட்சி இவனது அறிவு விருத்திக்குப் பெருங்காரணமாகும். சாட்சியக்காட்சிகளைத் தள்ளிவிடுவதுண்டெனில், நாம்மிருகவர்க்கங்களோடு வைத்தெண்ணப்படுவதே முடிபாகும். அன்றியும் பிரத்தியட்சக்காட்சி வாயிலாக அறிதல்கூடாத உண்மைகள் அநந்தம் உண்டு. பூர்வ இதிகாசங்களைக் கற்பதெல்லாம் சாட்சியக்காட்சி கொண்டேயாகும். நாம் எல்லாம் பிறத்தற்கு வெகுகாலத்துக்குமுன் நிகழ்ந்த சம்பவங்களை இப்போது நாம் பிரத்தியட்சமாகக் காணுதல் சிறிதும் கூடாது. ஆகவே சாட்சியைக் காட்சியை நாம் தள்ளிவிட்டால், இதிகாசங்களைக் கற்றல் ஒருங்கே கூடாதாகும். இதிகாசங்கள் மாத்திரமல்ல; பொதுப்பட வித்தைகள் அனைத்தும் ஆசிரியனைநம்பி, அவனது சாட்சியங்கொண்டே கற்கப்படுவனவாம். இங்ஙனங் கற்குமுறைதானே எமது அறிவு விருத்திக்குச் சிறந்த சாதனமாயுமுள்ளது. இந்தச் சாட்சியக்காட்சியை நாம் சீர்தூக்குவதுண்டாயின், இதுஎமக்குப் பிரத்தியட்சக்காட்சியினும் சிறப்புடைத்தென்பது தெற்றெனப்புலப்படும். பிரத்தியட்சக்காட்சி எமது அல்ப அனுபவத்தின் மாத்திரமே தங்கிநிற்பது. சாட்சியக் காட்சியோ எனின், எம்மினும் பன்மடங்கு சிறந்த ஆப்தரது அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இங்ஙனஞ்சிறந்த சாட்சியக்காட்சி காரணமாக நம்மிடத்தே கிளரும் விசுவாசமாகிய உணர்ச்சி எமக்குப் பெரிதும் சிறப்புடைத்தாம் என்பதையும், அவ்வுணர்ச்சி எமக்கு இயற்கை மரபாகக்கிளர்தலின், அதனை நாம் கொள்ளாதொழிதல் கூடாதென்பதையும், இங்ஙனம் எமக்குச் சாலச் சிறப்புடையதும், இயற்கைவழிவந் தமைவதுமாகிய விசுவாசத்தின்வழி நாம் ஒழுகுதல் பற்றி எம்மேற் குற்றம்பாரித்தல் பெருங்குற்றமா மென்பதையும் இக்காலத்தே அறிவான் மயங்கி அழியும் விஞ்ஞானவாதிகள் கவனித்தாற் பெரிதும் நன்மையுண்டாம்.

இனி இந்தப் பிரத்தியட்சக்காட்சி சாட்சியக்காட்சிகளைக் கண்ட அளவிலே நம்மிடத்தே விசுவாசமாகிய உணர்ச்சிதானுகைத் தோன்றுமாறு போலவே, நம்மைச் சார்ந்துள இயற்கைச் சார்புகள் காரணமாக, நமது அறிவுவிளக்கம் இன்றியும், நம்மிடத்தே ஓர் ஓர் உணர்ச்சி தோன்றுவதும் உண்டு, இது எம்மிடத்தமைந்து, எம்மை எல்லாம்

தனது ஆஞ்ஞைவழி நடாத்தும் எமது இயற்கைத் தருமத்தின்வழித்தாகும். இந்தத்தருமத்தைக் கடத்தல் எவராலும் ஏலாது. அதுமட்டோ! இவ்வியற்கைத் தருமத்தின்வழி ஒழுகுதல் தானே எமது விருத்திக்குப் பெரிதும் அனுகூலமுடையதோர் மரபாகும். நாம் இயற்கைக்கு மாறுகொண்டு ஒழுகுவதுண்டென்றால் நாம் விருத்தியுறுதல் சிறிதுங்கூடாதென்பதைச் சொல்லிக் காட்டவேண்டியதில்லை. ஆகவே இயற்கை வழிப்பிறக்கும் உணர்வாகிய விசுவாசத்தையும் நாம் பெரிது போற்றுதல் வேண்டுமென்பது நன்றாக நாட்டப்படும். உண்மை பேசுதல்வேண்டும் என்னும் விசுவாசம், எம்மிடத்தே, எமது பாலப்பருவத்தே, எம்மைச்சார்ந்துள இயற்கைச் சார்புகள் காரணமாகப்பிறக்கும். இந்த விசுவாசமாகிய உணர்ச்சி எமது அறிவுவிளக்கம் காரணமாக—அதாவது, உண்மைபேசுவதால் எய்தற்பாலதாகிய நன்மை இது என்று அறிந்து, அவ்வறிவு காரணமாக—நம்மிடத்துப் பிறப்பதல்ல, அங்ஙனமாயினும், அவ்வுணர்ச்சிவழி ஒழுகுவதே எமது கடனும், எமது விருத்திக்குரிய உபாயமுமாகும். இவ்வுணர்ச்சியைக் குறித்து நாம் சற்றே நுணுகி ஆலோசிப்பதுண்டெனில், இதுவே நாம் இவ்வுலகத்திலே இயங்கும் இயக்கத்துக்கெல்லாம் முக்கியமான கருவியென்பது நன்றாக நாட்டப்படும். நாமெல்லாம் எங்கள் எங்கள் பாஷைகளைப்பயிலுமுறை அனைத்தும் இந்தஇயற்கை உணர்ச்சி வாயிலாகவேயாம். பாஷைப்பயிற்சி மாத்திரமல்ல, எமது பழக்கங்கள் ஒழுக்கங்கள் முதலிய அனைத்தும் இவ்வுணர்ச்சியை ஆதாரமாகக்கொண்டே நம்பால் அமைவன. இங்ஙனஞ் சிறந்தஇயற்கை உணர்ச்சியினது இன்றியமையாச் சிறப்பையும், அதன் வழி நாம் ஒழுகாதொழிதல் கூடாமையையும் ஒருசிறிதும் சிந்தியாது, அவ்வுணர்ச்சிவழிநிற்பாரை எல்லாம் பழித்துரைக்கும் தற்கால விஞ்ஞான வாதிகளது அறிவின் காலத்தை நாம் யாதுக்கொப்பிடுவோம்.

இன்னும்வரும்.

இங்ஙனம்:

யாழ்ப்பாணம். S. சபாரத்தின முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சரியையாதிகளின் சொரூபம்.

சரியையாதிகளாவன—சரியை, கிரியை, யோகம், ஞானம் நான்குமேயாம், இவைகளின் சொரூபம் என்பது இவைகளின் உண்மை நிலை அல்லது யதார்த்த நிலைமை. இவ்விஷயத்தை யான் இன்று எடுத்துக் கூறப் புகுந்தது எனெனின், சைவசித்தாந்தத்தைப் பற்றித் தனதபிப்ராயத்தைத் தெரிவித்த Rev T. Goodwill என்பார் சரியையாதிகளைப்பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கக் கண்டபோது எமக்குண்டாகிய மனோவியாகுலமின்னதெனக் கூறமுடியாது. அவர் எழுதியதாவது "They offer room and shelter to all those shadowy practices both of worship and common life that come before our minds at the mention of the word (idolatry.)", கல்மண்ணாதி விக்கிரகவணக்கமெனக் கேட்ட அட்சணம் நமது மனத்தின்கண் சாமானியரால் வாணாள் நடத்து முறையையும் வழிபாட்டையும் தெரிவிக்கக் கூடிய சில அக்ஞகர்யங்களையுந் தம்முளடக்கிக் கொண்டிருக்கின்றன "என்று எழுதுகின்றார்" "என்ன புண்ணியஞ் செய்தனை யிருங்கடல் வையத்து நந்தம் வலஞ்சுழிவாணனை வாயாரப்பண்ணியாதரித் தருந்தியும், பாடியும் வழிப்படுமதனாலே" என்று எமது ஞான ஸம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்த வித்திருப்பாசுரத்திலுள்ள காம்பீரியத்தையும், இக்கிறிஸ்துவநண்பர் கொண்ட அபிப்பிராயத்தையும் கண்டுழி என்ன மனோ வேற்றுமையைக் காண்பிக்கின்றது கவனியுங்கள், "வாய்த்தது நந்தமக்கி தோர்பிறவி மதித்திடுமின்—தில்லை யம்பலத்துக் கூத்தனுக் காட்பட்டிருப்பதன்றோ நந்தங் கூழைமையே" என்றும் "இனித்தமுடைய பொற்பாதமுங்காணப்பெற்றால், மனித்தப்பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே என்றும் "அன்னம்பாலிக்குந் தில்லைச்சிற்றம்பலம்—கண்டின் புற, இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே" என்று பிறவி

யினு லடையக் கூடிய பெரும் பேறுக எம்பரமாசாரியர்கள் கட்டளை யிட்டிருக்கவும் "கனியினும் கட்டிப் பட்ட கரும்பினும், பனிமலர்க்குழற்பாவை நல்லாரினும், தனிமுடிகவித்தாளுமரசினும், இனியன்றன்னடைந் தார்க்கிடைமருதனே" என்று இனிமையிலும் இனிமைஎன்றும், பெருமையிலும்பெருமை வாய்ந்ததென்று அடிக்கடிஎடுத்திசைத் திருக்கவும், இதைச் சாமானிய மென்று வேறுசிலர் எடுதிசைத்தார். எந்தெந்த மனோநிலைமையினின்று இவர்கள் நோக்கியிருக்க வேண்டுமென்று நான் உங்களுக்குக் கூறவும் வேண்டுமோ கிறிஸ்து நண்பர் இதை 'Shadowy practices" (not illuminative Perception of God.) என்று குருட்டு அல்லது அக்ஞவழிபாடு என்றார், எமது ஆசாரியர்களோ "ஞானவழி பாடு என்றார்-யாவத்நேந்திரியவைகல்யம்—யாவந் நாக்ரமதே ஜராதவத் பூஜயசங்கரம்" எவ்வளவுக்கெவ்வளவு நினது இந்திரியாதிகளுள் லோபம்வரவில்லையோ எவ்வளவுக்குள் நரைதிரை மூப்புகள்நினை ஆக்கிரமிக்கவில்லையோ அதற்குள்ளாக இன்பத்திற் குறைவிடமான அண்ணலை அணுகவென்று கண்விழித்த மெய்யறிவோடு செய்யவேண்டியதென விதித்தார். இவ்வாறு இருவர்களும் வேறுவேறு நிலைமையினின்றும் ஓர் விஷயத்தை நோக்கினார்கள் என்பது வெளிப்பட்டது. கிறிஸ்தவநண்பர் எவ்வாறு நோக்கினார். நமது ஆசாரியர் எவ்விதமாக இவ்வழிபாட்டை நோக்கினார்கள் என்புழி "கிறிஸ்தவநண்பர்கள் கல்மண்வழிபாடாகக் கொண்டார். அதனால்அவர்க்கிது ருசிக்கவில்லை (Idolatry) எமது ஆசாரியர்களோ "உரைசேருமெண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேத நிரைச்சேரப் படைத்தவற்றினுயிர்க் குயிராயங்கங்கே நின்றான் கோயில்" என்றும் "காணுமாரறிய பெருமானாகிப்... பேருலகம் படைத்தளிக்கும் பெருமான்கோயிற்றாணுவாய் நின்ற பரதத்துவனை யுத்தமனையிறைஞ் சீரென்று வேணுவார் கொடி விண்ணோர்தமை விளிப்ப போலோங்குமிழலையாமே" என்றும், "அகனமர்ந்தவன் பினராயறு பகை செற்றைம்புலனு மடக்கிஞானம் புகலுடையோர்தம் முள்ளப் புண்டரிகத்துள் ளிருக்கும் புராணர்கோயில்" என்று ஸர்வேச்வரனது வழிபாடாக, காணமுடியாத கடவுளும் கண்காணுமாறு கொண்டகோலமாகவும், உள்ளத்தில் அன்புததும்பி நிற்கவும் காமமாதி அரிஷட் வர்க்கங்களைக்களைந்து, இந்திரியாதிகளையடக்கி ஞானங்கைவரப் பெற்ற பரமஞானிகளும் தமதுள்ளத்தில் காணும் பழையரிற் பழையோனாகிய பெருமான் வழிபாடாகவும் கொண்டார். இவ்வித வேறு

வேறுமன்றோ நிலைமைகளே இவ்வேறு வேறு அபிப்பிராயங்கட்குக் காரணம். இன்னும் கூறப்புகின், யாருடையது அக்ஞானநோக்கு யாருடையது ஞானநோக்கு எனின் "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான் புகிலளவில்லை கிடைக்கவேண்டா கோட்பாலனவும் வினையுங்குறுகாமை யெந்தை,தாட்பால் வணங்கித்தலை நின்றிவை கேட்கத்தக்கார்" என்றும். திருக்கோயில்களிற்காணப்படும்தெய்வத் திருவுருவங்கள்யாவும் ஸர்வேச்வரன் ஆட்பாலவர்க் கருளும் வண்ணத்தையும், அவனுடைய உண்மைச் சொரூபத்தையுங் காட்டவல்லதென்றும், இவைகளை அன்பினாலறியலாமன்றி வேறெதனாலும் அறியமுடியாதென்றும் கூறியதால் "அன்பில்லார்மற் பார்த்துழி அவர்களுக்கு உண்மைதோன்றாது, ஸ்ரீமத்அப்பர்சுவாமிகள் "குறிகளும் அடையாளமும் கோயிலும் அவர்நின்றதோர் நேர்மையும் அறிய வாயிரமாரணமோதிலும் பொறியிலீர் மனம்என்கொல்புகாததே" என்றும்கூறியுள்ளார். ஆனதுபற்றியே "கன்மனவீர் கழியுங்கருத்தே சொல்லிக்காண்பதென்னே, நன்மன வாநவிறில்லையம்பலத்து நட்டம், பொன்மலையில் வெள்ளக்குன்றது போலப்பொலிந்திலங்கி, யென்மனமே யொன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே" என்றார் இவ்வாறு அன்புடைமனங் கொண்டு உள்ளுணர்வுடன் காணின் "ஊனத்தை நீக்கி யுலகறிய வென்னையாட் கொண்டவன், தேனைத்தெனக் கினியான் றில்லைச் சிற்றம்பலவனெங்கோன், வானத்தவருய்ய வன்னஞ்சையுண்ட கண்டத்திலங்கு, மேனத்தெயிறுகண்டாற் பின்னைக்கண் கொண்டு காண்பதென்னே" "தில்லைச் சிற்றம்பலவன் றிருவடியைக் கண்டகண் கொண்டுமற்றினிக் காண்பதென்னே" என்று ஞானிகள்விழைந்தபடி வேறு எதுவும் ருசிக்கமோ. இவ்வித நோக்கமன்றி அர்த்தமில்லாத கல்மண்பதுமைகளாக கிறிஸ்துவ நண்பர்கள் கண்டதனையே அவர்கள் கூடித்தேர்ந்தனர்.

நண்பர்காள், கிறிஸ்தவ நண்பர் கூறியது ஆச்சரியமன்று. அவர் வேறுமதஸ்தரா யிருந்தும் சைவசித்தாந்தத்தைத் தம்மதத்தோடொத்துப் பார்த்துச் சிற்சில விஷயங்களைச் சிலாகித்தனர். ஆனால் நம்முள் அனேகர் வேதம் பிரமாணம் எனக்கொண்டும் தங்களை மகாஞானிகளெனக் கொண்டும் சைவசித்தாந்தத்தைப் பற்றிய பெருநலங்களை யாண்டாயினும் எடுத்துக் கூறியதுண்டோ, இதுவரை ஆங்கிலத்தில் சைவசித்தாந்தத்தை சிலாகித்து எழுதியவர்கள்

கிறிஸ்தவப் பாதிரிகளே, இன்னும் அவர்களுக்குநாம் உண்மையை எடுத்துக் கூறின் ஒத்துக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. நமது வைதிக மதத்தினரோ வெனின் சைவத்தையும் சிவபெருமானையும் பற்றித் தங்கண் முன்னோர்கள் எழுதிவைத்த தப்புப்பாடத்தைக் கொண்டு துவேஷமே புரிகின்றனர் யாம்சமீபத்தில் உத்தராதிமட ஸ்வாமிகளைப் பார்க்க நேர்ந்தது, அப்புண்ணியவானுக்குச்சைவசித் தாந்தம், சைவநூற்கள் இவைகளெனத் தெரியாது, ஆயின் அவர் முன்னோராகிய மத்துவாசாரியர் முதலினோர் சிவநிந்தையையும் சிவ சாஸ்திரநிந்தையையும் நாட்டியிருக்கின்றனர்—இவ்வாறே மற்றவர் கள் விஷயத்திலு மெண்க இவ்வினைத்திற்கும் காரணம் யாதெனின் சைவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர நடாத்தாமையே முன்னோர் சேமித்து வைத்த பொருளைக் கொண்டு என்ன காரியம் பண்ணக் கூடாது, சிவார்தநம் யஸ்திய ஜெத்பிராணன்—சிவபக்தார்த்த மேவச—சிவாசாரார்த்த மதவா சிவவித்யார்த்த மேவவா—நதேந ஸ்திருச: கஸசிந் முக்தி மார்கஸ்திதோ நம:

ஏன் கிறிஸ்து நண்டர் கூறியது சரிதானெ நம்மவர் சரியையை யுற்றுக் கூறுங்கால்.

"தாதமர்க்கஞ்சாற்றிற் சங்கரன்றன் கோயில்றலமல கிட்டிலகு திருமெழுக்குஞ் சாத்திப், போதுகளுங் கொய்து பூந்தார்மாலை கண் ணிபுனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித், தீதிறிருவிளக் கிட்டுத் திருநந்த வனமுஞ் செய்து திருவேடங்கண்டாலடியேன் செய் வ, தியாது பணியீரென்று பணிந்தவர்தம் பணியுமியற்று வதிச் சரி யைசெய் வோரீசனுலகிலிருப்பர்" :—

இன்னும்வரும்

இங்ஙனம்
குளித்தலை-அரங்கசாமி ஐயர்.